ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1995) நிறைவேற்றப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அறிவிப்புகள் — தொடர்ச்சி

(உ) முதலமைச்சர் திருக்கோயில் பராமரிப்பு நிதிக்கு உறுப்பினர் திரு. எஸ். அண்ணாமலை ஊதிய நன்கொடை அளித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அண்ணாமலை அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய, திருக்கோயில் பராமரிப்பு நிதிக்காக, ஆண்டுதோறும் தன்னுடைய சம்பளத்தை வழங்குவதாக, இந்தப் பேரவையில் அறிவித்திருந்தார்கள். அந்தவகையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக, அவர், அவருடைய சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோயில் பராமரிப்பு நிதிக்கு அளித்து வந்தார்கள். இந்த ஆண்டும், அதேபோல், ரூ. 36 ஆயிரத்தை, தன்னுடைய சம்பளத்திலேயிருந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோயில் பராமரிப்பு நிதிக்காக வழங்குகிறார்கள். அதற்காக, காசோலை ரூ. 30 ஆயிரத்தையும்,

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

ரொக்கப் பணம் ரூபாய் 6 ஆயிரத்தையும், என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற எல்லா உறுப்பினர்களும் அவரைப் பின்பற்றினால் இன்னும் நன்றாக இருக்கும்.

பிற்பகல் 1-30

(ஊ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்த 35 நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்று இருக்கிற நம்முடைய பேரவையின் அலுவல்கள், இறுதியாக இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் சில அறிவிப்புகளைப் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டமன்ற பத்தாவது பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடர் 13-3-1995-ஆம் நாளன்று தொடங்கி, இன்று 6-5-1995 வரையிலும் சிறப்புற நடைபெற்று, பின்வரும் பல்வேறு அலுவல்களை நிறைவேற்றியுள்ளது என்பதைப் பெருமகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை கூடிய மொத்த நாட்கள், ஆளுநர் உரைக்கான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தையும் சேர்த்து இந்த ஆண்டு 35 நாட்கள்; அதேநேரத்தில் சென்ற ஆண்டு 34 நாட்கள்தான்; அதிலேயும் ஒரு நாள் கூடவேதான் கூட்டி இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாலையிலும் பேரவை நடைபெற்ற நாட்கள், இந்த ஆண்டு 8; சென்ற ஆண்டு 9. அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் 174 மணி 20 நிமிடங்கள் ஆகும்.

பேரவையில் ஆளுநர் அவர்கள் 13-3-1995 அன்று உரையாற்றினார்கள். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்,. இந்த ஆண்டு 5 நாட்கள், சென்ற ஆண்டும் அதே 5 நாட்கள்தான்.

1995-96 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 22-3-1995 ஆம் நாளன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள்.